# அன்பில் சிறந்தவர் யார்?

*- by Mr.* ***N. Venkataramani,*** *Former Senior Manager, Indian Bank*

கருத்தொருமித்த அந்த அன்பான தம்பதியர் முன்
இறைவன் தோன்றி என்ன வேண்டும் என வினவினான்

அவர்கள் இருவரும் தங்கள் இருவரில் அன்பில்
சிறந்தவர் யார் என்று கேட்டனர்

இறைவன் ஒரு பந்தயம் வைத்து முடிவு
செய்வதாக கூறினார்

பந்தயம் முடிவில்லாமல் போய்க்கொண்டு இருந்தது
யார் வெற்றி பெற்றார் என்று முடிவு செய்ய முடியவில்லை

தம்பதியர் போட்டியின் முடிவை இறைவனிடம் கேட்டனர்

இறைவன் சிரித்துக்கொண்டே சொன்னான்....

உங்கள் போட்டியில் Winning Post நான் வைக்கவில்லை
உங்கள் வாழ்வு முழுவதும் நீங்கள் போட்டி போட்டுக்கொண்டு
ஒருவர் மீது ஒருவர் அன்பைச் செலுத்துங்கள்

... நீங்கள் வாழும் வரை

... சரித்திரம் உங்களை உதாரணமாக எடுத்துக்கொள்ளும்

... உங்கள் வாழ்க்கை அனைவருக்கும் பாடமாகும்...